Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 881/2019 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW17 / PW11 |
| Name | : | சக்திவேல் உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 11.05.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை:</u>

நான் சேத்தியாத்தோப்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து 2020 ம் வருடம் ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த01.05.2018 ம் தேதி தூக்கணாம்பாக்கம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் கரிக்கலாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று பாத்தபோது தமிழரசன் த/பெ. குமார், தமிழ்வாசன் (எ) முருகன் மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர்களை மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்திருந்தார்கள். நான் அதை தொடர்ந்து பாண்டிச்சேரி அரசு மருத்துமனைக்கு சென்றபோது அங்கு உள்நோயாளியாக இருந்த தமிழரசன் த/பெ. குமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.53/2018 ல்

சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் முன் பக்கத்தில் உள்ள கையெழுத்தும் பின் பக்கத்தில் உள்ள கையெழுத்தும் வேறுபடுகிறது என்றால் சரிதான். எழுதாத வெள்ளை தாளில் புகார்தாரரின் கையொப்பத்தை வாங்கிக்கொண்டு பின்னிட்டு காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.